அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

பிப்ரவரி - 2025 | மரம் - 4 | கன்று - 2 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

## கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.

நீதிமொழிகள் 14:26



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் முதன்மை வாசர்களான குட்டீஸ்களே! இவ்விதழின் கதைகளைப் படித்து இளையோருக்கு சுவைபட எடுத்துச் சொல்லும் பாட்டி தாத்தாமார்களே! உங்கள் அனைவரையும் இந்த சிறார் இதழின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

‘தேவனை நேசி, பிறனை நேசி’ இவ்விரு கட்டளைகளையும் ஒற்றைக் கட்டளையாக்கியவர் இயேசு. அவரது போதனைகளில் புறக்கணிக்கப்படும் ஏழைகளையும் முதன்மைப்படுத்தினார். எதிரிகளையும் நேசியுங்கள் என அன்பின் அடுத்த பக்கத்தையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் இயேசு.

பரலோக தகப்பனால் அனுப்பப்பட்ட அவர், அன்பைத் தாண்டிய எந்த திருப்பணியையும் செய்யவேயில்லை. இயேசுவைப் பின்பற்றும் நமது வாழ்க்கை என்பது அவரது அன்பில் நிலைத்திருக்க வேண்டிய வாழ்க்கையாகும்.

தேவன் தமக்கு யாதொன்று தேவையானதுபோல, அவருக்குப் பணிவிடை செய்ய நம்மை படைக்கவில்லை. (வாசிக்க: அப்போஸ்தலர் 17:25). மாறாக, அவர் நம்மைக் கண்டு பிரியம்கொள்ளும்படியான தெய்வீக வாழ்க்கையை நாம் வாழ பெயர் சொல்லி அழைக்கப்பட்டுள்ளோம். அதனால் தான், நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை தமது வேத வார்த்தைகளாலும், சரீரத்தில் வெளிப்பட்ட அவ்வார்த்தையான இயேசுவிடமிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம்.

‘‘அவரோடு இணைந்திருப்பதாகக் கூறுவோர் அவர் வாழ்ந்தவாறே வாழக் கடமைப்பட்டவர்கள்’’ (1 யோவான் 2:6). இயேசுவோடு நாம் இணைந்திருக்கிறோமெனில் அவர் வாழ்ந்தவாறே நாம் வாழவேண்டும் என்பது கண்டிப்பு கலந்த கட்டளை. இது மேலோட்டமான அறிவுறுத்தலும் அல்ல.

‘‘நான் சொல்வதைச் செய்’’ எனும் அடிப்படையில் பழைய ஏற்பாடு கட்டமைக்கப்பட்டது. கட்டளைகளே பழைய ஏற்பாட்டின் பிரதான செய்தி. ஆனால் ‘‘என்னைப் பின் செல்’’ எனும் சிந்தனையில் புதிய ஏற்பாடு அமைந்திருக்கிறது. அவரது வாழ்க்கையை பார்த்து, அவரிடம் கற்று அதன்படி வாழ்வதே இங்கே பிரதானம்.

கட்டளைகளைப் பார்த்து நீச்சல் கற்பது கடினம். ஆனால் பயிற்சியாளர் ஒருவர் நம்மோடு சேர்ந்து நீந்தும் போது அதன்படி நீந்துவது எளிது. அதனால் தான் இயேசுவே பூமிக்கு வந்தார். வாழ்வது எப்படி என்பதை தனது வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டினார். அவ்வித தூய வாழ்விற்கு உதவும் கட்டுரைகள் உள்ளே நிரம்பிக்கிடக்கின்றன. வாருங்கள் வாசிப்போம். மூச்சுக்காற்றைப் போல் சுவாசிப்போம்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# லவங்கம்



''என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும்... உன் தோட்டம் மாதளஞ்செடிகளும், அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச்செடிகளும், நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும், வெள்ளைப்போளச்செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்கச்செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது'' (உன்னதப்பாட்டு 4:12-14).

மணவாளியின் தோட்டத்தில், கனி மரங்களும், வாசனை வீசும் செடிகளும் இருப்பது போல, நம்மில் ஆவியின் கனிகள் காணப்பட வேண்டும். தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வேண்டும். கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனை நம் வாழ்க்கையில் வீச வேண்டும். எல்லா இடத்திலும் எப்பொழுதும் நம்மை வெற்றி சிறக்கப்பண்ணுகிற அவரை அறிகிற அறிவின் வாசனை வீச வேண்டும். இம்மாதம் லவங்கத்தைக் குறித்து பார்க்கலாம்.

**லவங்கம்** என்பது ஒரு மருத்துவ மூலிகையாகும். கிராம்பு இந்திய மருத்துவத்திலும் ஆயுர்வேதத்திலும் முக்கியப் பொருளாகக் கருதப்படுகிறது. இது ஆணி போலவும் காணப்படுவதால் Clove என்று பெயர் வந்தது. இது Myrtaceae குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் தாவரவியல் Syzygium aromaticum பெயர். இது சமையலில் நறுமணப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் ஏராளமான மருத்துவக் குணங்கள் உள்ளன. இது இந்தோனேசியாவில் தோன்றிய தாவரமாகும். இது இந்தோனேசியாவில் பெரும்பான்மையாகப் பயிரிடப்பட்டாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் பயிரிடப்படுகிறது. லவங்கம் தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி, ஏற்காடு, திருநெல்வேலி மற்றும் கீழ்பழனி மலைப்பகுதிகளில் பயிரிடப்படுகிறது. வெப்பமண்டலப் பயிரான லவங்கம் நல்ல வெதுவெதுப்பான ஈரப்பதமுள்ள சூழ்நிலையில் நன்கு வளரும்.

லவங்கத்திற்கு கிராம்பு, அஞ்சுகம், உற்கடம், கருவாய்க்கிராம்பு, சோசம், திரளி, வராங்கம் என்ற பல பெயர்களும் உண்டு.





லவங்கத்தில் கார்போ ஹைட்ரேட், ஈரப்பதம், புரதம், வாலடைல் எண்ணெய், கொழுப்பு, நார்ப்பொருள், மினரல், ஹைட்ரோகுளோரிக் அமிலச் சாம்பல்கள், கால்சியம், பாஸ்பரஸ், தயமின், ரிபோ பிளேவின், நயாசின், வைட்டமின் சி மற்றும் ஏ போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. நறுமணமூட்டிகளில் அதிகளவில் ஆன்டி ஆக்ஸிடன்ட்களைக் கொண்டது இலவங்கம். இதனால் வெளியிலிருந்து உடலைத்தாக்கும் கதிர்களிடமிருந்து உடலுக்கு பாதுகாப்புக் கிடைக்கிறது.

யூஜெனால் என்பது இலவங்கத்தின் முக்கிய வேதிக்கூறு ஆகும். இதுவே அதன் பெரும்பாலான மருத்துவ குணத்திற்கு காரணமாக உள்ளது. இலவங்கமானது ஃபிளேவனாய்டுகள், ஹைட்ராக்சி பென்சோயிக் அமிலங்கள், ஹைட்ராக்சி சின்னமிக் அமிலங்கள் போன்ற பீனாலிக் சேர்மங்களின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.

இலவங்க மரம் பச்சைப் பசேலென நடுத்தரமாக 40-45 அடி உயரம் வரை வளரும். மரத்தின் அடியில் இருந்து கிளைகள் சம இடைவெளிக்கு ஒன்றாக வளர்ந்தும் நுணியில் கிளைகள் சிறுத்தும் குறுகியும் கோபுரம் போல் காட்சியளிக்கும். இணையாக இருக்கும் இலைகளிலும் குச்சிகளிலும் ஒரு வித நறுமணம் வீசும். தலைப்பகுதியில் பூக்கள் மலரும். இம்மரம் 75 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

லவங்கம் ஒரு நீண்டகாலப் பயிர். கரும்பாறை மலைகளில் 100 வருடத்துக்கு மேல் பழைமையான லவங்க மரங்கள் நிற்கிறது. இந்தோனேஷியாவில் 450 வருடம் ஆன லவங்க மரம் இருக்கிறதாக சொல்கிறார்கள். மழை, வெயில், பனி, கடல் காற்று இந்த நான்கும் சீராக மரத்துக்குக் கிடைத்தால், விளைகிற லவங்கம் தரமானதாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த நான்கு காலநிலையும் லவங்க பயிருக்குக் கிடைக்கிறது. அதனால் தான் இந்தியாவிலேயே கன்னியாகுமரி மாவட்ட லவங்கம் நல்ல தரமானது என்பார்கள். மலை, சமதளம் என்று எல்லா இடத்திலும் லவங்கம் வளரும். ஆனா, கடல் மட்டத்தில் இருந்து 1,000 அடி, 2,500 அடிக்கு மேல் உயரத்தில்தான் சிறப்பாக வளரும். அங்கே தான் விளைச்சலும் தரமும் நன்றாக இருக்கும்.

சீனத்தின் பொற்காலம் எனப்படும் ‘ஹான் ராஜ்ஜியத்தில்’ அரசரிடம் நிறைகுறைகளைக் கூற வேண்டுமென்றால், பொதுமக்கள் வாயில் இலவங்கத்தை அடக்கிக்கொண்டுதான் பேச வேண்டுமாம். கிருமிகள் வாய்மூலம் பரவி அரசரைத் தாக்காமல் இருக்க இந்த ஏற்பாடு!

லவங்கம் என்பது ஒரு செடியின் மொட்டுப் பகுதியாகும். பூ பூத்த 4-6 மாதங்களில் மிக அழகாக பச்சையிலிருந்து இளஞ்சிவப்பு நிறமாக மாறும் பொழுது, பூக்கள் இதழ் விரியத் தொடங்குவதற்கு முன்னர் மொட்டாக இருக்கும் போதே அவை பறிக்கப்பட்டு, வெயிலில் உலர்த்தி லவங்கமாக மாற்றப்படுகிறது. பூக்கள் நவம்பர் முதல் ஜனவரி மாதம் வரை தோன்ற ஆரம்பிக்கும். லவங்கத்தின் மொட்டு, இலை, தண்டு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. அன்றாடம் பயன்படுத்தும் பற்பசைகளில் லவங்கம் சேர்க்கப்படுகிறது. இதிலிருக்கும் சுறுசுறு தன்மையானது வாய்க்கு புத்துணர்வைக் கொடுக்கிறது.

காரத்தோடும் சிறிது இனிப்புச் சுவையோடும் விறுவிறுப்புத்தன்மை கொண்டிருக்கும் இலவங்கம் மயக்கம், வாந்தி, பேதி, வாய்வுக் கோளாறுகள், ஆசனவாய் எரிச்சல், தசைப்பிடிப்பு, செவி நோய்கள், சரும நோய்கள் என பலவற்றை நீக்கும் திறன் கொண்டது.

கிராம்பில் வைட்டமின் சி உள்ளது. இது உடலில் வெள்ளை இரத்த அணுக்களை அதிகரிக்க உதவுகிறது. இது உங்கள் உடலை எந்த நோய்த்தொற்றுகளும் நெருங்காமல் பார்த்துக்கொள்ளும். அதோடு நோய்களுக்கு எதிராகவும் போராட உதவுகிறது.

காலையில் இலவங்கத்தை உட்கொள்வது செரிமான பிரச்சினைகளுக்கு உதவும். இலவங்கம் செரிமான நொதிகளின் சுரப்பை அதிகரிக்கிறது. எனவே மலச்சிக்கல் மற்றும் அஜீரணம் போன்ற செரிமான கோளாறுகளைத் தடுக்கிறது. இலவங்கம் நார்ச்சத்து நிறைந்தது.

பல்வலியைத் தடுக்க கிராம்பு எண்ணெய் பொதுவாக பற்களில் பயன்படுத்தப்படுகிறது. இலவங்கத்தை உட்கொள்வது பல்வலியைக் குறைக்கவும் உதவும். மேலும், பல் வலி, ஈறுகளில் வலி இருந்தாலும் அந்த இடத்தில் இலவங்கம் வைத்தால் வலியைத் தணிக்கும்.

இலவங்கத்தில் இருக்கும் யூஜெனோல் வலி நிவாரணி மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது. இது தலைவலிக்கு ஒரு அற்புதமான தீர்வாக இருக்கிறது. இலவங்க எண்ணெயை நுகர்ந்தால் கூட நிவாரணம் கிடைக்கும். கல்லீரல் உடலில் நச்சுத்தன்மையை நீக்க உதவுகிறது. இலவங்கத்தில் இருக்கும் யூஜெனால் கல்லீரல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

இலவங்கத்தில் ஃபிளாவனாய்டுகள், மாங்கனீசு மற்றும் யூஜெனோல் உள்ளன. அவை எலும்பு மற்றும் மூட்டு ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன. இலவங்கம் உட்கொள்வது எலும்பு அடர்த்தியை அதிகரிக்க உதவுகிறது.

காலையில் 2 இலவங்கங்களை வாயில் அப்படியே வைத்திருந்தால் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களை அகற்றிவிடும். இது ஈறுகளின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

நீரிழிவு நோயாளிகள், தினம் உணவில் இலவங்கம் சேர்க்க வேண்டும். இலவங்கம் உங்கள் உடலில் இன்சுலின் போல வேலை செய்கிறது. அதாவது, இரத்தத்திலிருந்து அதிகப்படியான சர்க்கரையை நீக்குவதன் மூலம், அவை இரத்தத்தின் சர்க்கரை சமநிலை செய்கின்றன.

இலவங்கத்தில் ஆன்டிஆக்ஸிடன்ட் மற்றும் ஆன்டிகார்சினோஜெனிக் பண்புகள் உள்ளன. அவை உடலை நுரையீரல், மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கின்றன. இலவங்கத்தில் உள்ள புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியைத் தடுக்கிறது மற்றும் உடலில் புற்றுநோய் செல்கள் இறப்பை அதிகரிக்கும்.

ஆஸ்துமாவுக்கு சிகிச்சையளிக்க இலவங்கம் உதவும் என ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது இலவங்கம் சுவாசக் குழாயில் உண்டாகும் அழுத்தத்தை தணிக்கிறது. எந்த பாக்டீரியாக்களும் நுரையீரலுக்குள் நுழைவதைத் தடுக்கிறது.

இலவங்கம் மன அழுத்த எதிர்ப்பு பண்புகளைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது, மேலும் காலையில் அவற்றை மென்று சாப்பிட்டாலோ அல்லது அப்படியே வைத்திருந்தாலோ அன்றைய நாள் முழுவதும் உங்களை மிகவும் நிதானமாகவும் அமைதியாகவும் உணர வைக்கும்.

இலவங்கத்தை அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொண்டால் ஒவ்வாமை போன்ற பக்க விளைவுகள் உண்டாகும். ஆகவே மருத்துவ ஆலோசனைப்படி எடுத்துக்கொள்ள பக்க விளைவுகள் இன்றி நன்மை பயக்கும்.

**தேவன் நல்லது என்று கண்டார். ஆம், தேவன் படைத்ததெல்லாம் நன்றாகவே இருக்கிறது. நன்மைகளின் நாயகனுக்கு நன்றி.**



# முதல் மனிதர்களின் முதல் பாவம்

**ஆதியாகமம் 3ஆம் அதிகாரம் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. ஆதாம் தன் மனைவிக்கு என்ன பேரிட்டான்?
2. தேவனாகிய கர்த்தர் எந்த வேளையிலே தோட்டத்தில் உலாவினார்?
3. ஆதாமும் ஏவாளும் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, எந்த இலைகளால் தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்?
4. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் எதினால் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்?
5. தேவன் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே எதை வைத்தார்?
6. நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று தேவன் யாரை சபித்தார்?
7. உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் என்று தேவன் யாரை சபித்தார்?
8. பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய் என்று தேவன் யாரை சபித்தார்?
9. தோட்டத்தின் நடுவிலிருக்கிற விருட்சத்தின் கனியை புசித்தவுடன் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்று ஏவாளிடம் கூறியது யார்?
10. ஆதாமும் ஏவாளும் தோட்டத்தின் நடுவிலுள்ள விருட்சத்தின் கனியைப் புசித்தவுடனே அவர்களுக்கு என்னவாயிற்று?

விடைகள் 9ஆம் பக்கம் பார்க்கவும்

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

மெலிதான காற்று ஏதேன் தோட்டத்தில் வீசிக் கொண்டிருந்தது. தேவன் தான் படைத்த மனிதனையும் அவனுடைய துணையையும் பார்ப்பதற்காகத் தோட்டத்துக்கு வந்தார். தேவன் வரும் ஓசையைக் கேட்ட ஆதாமும் ஏவாளும் ஓடி ஒளிந்தனர். தேவனின் கட்டளையை மீறிவிட்டோமே என்னும் எண்ணம் அப்போது தான் அவர்களுக்குள் உறுத்தியது.

''ஆதாமே... நீ எங்கே இருக்கிறாய்?'' தேவனின் குரல் தோட்டத்தில் எதிரொலித்தது.

பதில் இல்லை...

''ஆதாமே... நீ எங்கே இருக்கிறாய்?'' தேவனின் குரல் மீண்டும் ஒலித்தது.

'தேவனே நான் இங்கே புதரின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறேன்.' ஆதாம் பதில் சொன்னான்.

'ஒளிந்து கொண்டாயா? ஏன்?'

'உம்முடைய குரலைக் கேட்டதும் எனக்குள் பயம் வந்துவிட்டது தேவனே. அதனால் தான் நான் ஒளிந்து கொண்டேன். இதோ ஏவாளும் இங்கே ஒளிந்து கொண்டு தான் இருக்கிறாள்' ஆதாம் சொன்னான்.

'நேற்றுவரை என்னிடம் பயமில்லாமல் பழகினாயே? இன்று எப்படி உன்னிடம் புதிதாய் ஒரு பயம் வந்திருக்கிறது? வா வெளியே' தேவன் அழைத்தார்.

'இல்லை தேவனே. என்னால் இப்போது வெளியே வர முடியாது.'



'ஏன்?'

'ஏனென்றால் நான் நிர்வாணமாய் இருக்கிறேன்' ஆதாம் சொன்னான்.

நான் நிர்வாணமாய் இருக்கிறேன் என்று ஆதாம் சொன்னதும் தேவன் கோபமடைந்தார். 'நிர்வாணமாய் இருக்கிறாயா? நீ நிர்வாணமாய் இருக்கிறாய் என்று யார் உனக்குச் சொன்னது? நீ என்னுடைய கட்டளையை மீறினாயா? நான் உண்ணக் கூடாது என்று சொல்லியிருந்த கனியை நீ உண்டாயா?' தேவனின் குரல் கோபத்தில் ஒலித்தது. அதுதான் தேவன் கோபமடைந்த முதல் சம்பவம்.

''ஆண்டவரே... நான் அல்ல ஆண்டவரே. நீர் இட்ட கட்டளையை நான் மீறவில்லை. நீர் எனக்குத் துணையாக அளித்தீரே அந்தப் பெண் தான் நீர் இட்ட கட்டளையை மீறினாள். அவள் தான் எனக்கும் அந்தக் கனியைத் தந்தாள். எனவே நானல்ல தேவனே அவள் தான் குற்றவாளி' ஆதாம் பழியை ஏவாளின் மேல் போட்டான்.

'ஏவாளே... நீ ஏன் அப்படிச் செய்தாய்? ஆதாமுக்கு நான் இட்டிருந்த கட்டளை உனக்குத் தெரியாதா?' தேவன் ஏவாளிடம் கேட்டார்.

'உம் கட்டளை எனக்குத் தெரியும் தேவனே. ஆனால் ஒரு பாம்பு தான் என்னிடம் வந்து அந்த கனியை உண்ணுமாறு கட்டாயப்படுத்தியது. அதனால் தான் நான் அதை உண்டேன். இது என் தவறில்லை தேவனே. இது பாம்பின் தவறு தான்' ஏவாள் சொன்னாள். செய்த தவறை ஒத்துக்கொள்ளாமல் அந்தத் தவறுகளை அடுத்தவர் தலை மேல் சுமத்தும் பழக்கத்தை முதன்முதலாக அவர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

தேவனின் கோபம் அதிகரித்தது. என்னுடைய சொல்லை மீறி, பாம்பின் சொல்லை நான் படைத்த மனிதன் கேட்கிறானா என்னும் சினம் அவருக்குள் பொங்கி வழிந்தது. அவருடைய கோபம் முதலில் பாம்பின் மீது திரும்பியது.

'தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் (பாம்பு) பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டுமிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்' என்று சாபமிட்டார் தேவன். தேவன் இட்ட முதல் சாபம்! (ஆதி. 3:14,15)



பின் தேவனின் கோபப்பார்வை ஏவாளை நோக்கித் திரும்பியது. 'அவர் ஸ்திரீயை (ஏவாள்) நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்' என்றார் (ஆதி. 3:16).

இறுதியில் தேவன் ஆதாமை நோக்கி: 'நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம்

சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப் பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்' என்றார் (ஆதி. 3:17-19).



ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.

பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.

தொடரும்...




6ஆம் பக்கத்தின் விடைகள்

## முதல் மனிதர்களின் முதல் பாவம் - பதில்கள்

1. ஏவாள்,
2. பகலில் குளிர்ச்சியான வேளையிலே,
3. அத்தியிலைகளை,
4. தோல் உடைகளை,
5. கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும்,
6. ஏவாளை, 7. சர்ப்பத்தை,
8. ஆதாமை, 9. சர்ப்பம்,
10. அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது

# எட்டுக்கால் பூச்சி!



''தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே'' (நீதிமொழிகள் 30:28). சிலந்தி ஒரு பூச்சியாக இருந்தாலும், அரசன் கட்டியுள்ள மாளிகையில் வசிக்க விரும்பாமல், தன் கைகளினால் வலையை பின்னி அதில் வாசம் பண்ணுகிறது. அரசனால் அது வலையை பின்னி வசிப்பதை தடுக்க முடியாது. அது தன்னுடைய சுயாதீனத்தை வெளிப்படுத்தி வாழ்கிறது. யோசேப்பு போத்திபாரின் அரண்மனையில் வாழ்ந்து வந்தாலும் அவன் ஒரு சிலந்தியைப்போல பரிசுத்த வாழ்க்கை என்னும் வலையைப்பின்னி, தான் பின்னிய வலைக்குள் வாழ்ந்து வந்தான். உலகத்தின் பாவம் அவனுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. உலகத்தால் கறைப்படாத ஜீவியம் செய்வதில் சிலந்தியைப்போல ஞானமாய் வாழ தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக. இந்த மாதம் ஞானமுள்ள சிலந்தியைக் குறித்து பார்க்கலாம்.

**சிலந்திகள்** (Spider) கணுக்காலி வகையினைச் சார்ந்தது. இவை Arachinada என்னும் வகுப்பில் Araneda என்ற வரிசையில் உள்ளது. உலகில் 48,200 வகையான சிலந்தி வகைகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 205 வகை சிலந்திகள் விஷம் கொண்டவை. சிலந்திகள் அண்டார்டிகா தவிர மற்ற எல்லாக் கண்டங்களிலும் வாழ்கின்றன. பொதுவாக காடுகள், பாறை இடுக்குகள், குகைப்பகுதிகள், புதர் பகுதிகள் மற்றும் பாலைவனப் பகுதிகள் என பலதரப்பட்ட இடங்களில் வாழும் இயல்புடையவைகளாக உள்ளன.

எட்டுக் கால்கள், எட்டுக் கண்கள், நூலை உமிழும் தன்மை, நீரில் நடக்கும் தன்மை, உருமறைப்பு பண்பு போன்ற பல தனிச்சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பூச்சி சிலந்தியாகும். சிலந்தியினை எட்டுக்கால் பூச்சி, நூலாம் பூச்சி, உலூதை, காலந்தி, என்ற பெயர்களால் அழைப்பர்.



சிலந்தியின் உடலமைப்பினை இரு பகுதிகளாகப் பிரிப்பர். இந்தப் பகுப்பு முறையினை இரு டாக்மாட்டா (Tagmata) என்று கூறுவர். இதன் ஒரு பகுதி தலை மற்றும் நெஞ்சுப் பகுதியாகும். மற்றொன்று வயிற்றுப் பகுதியாகும். இவ்விரண்டுப் பகுதிகளையும் மெல்லிய உருளை வடிவான இணைப்புத் தண்டு இணைக்கிறது. இத்தண்டினைப் Pedicel என்பர். தலைக்கும் வயிற்றுக்கும் இடையிலானப் பகுதியில் முட்டைப் பை உள்ளது. ஒரே நேரத்தில் 3000 முட்டைகளை இடுகின்றன. சிலந்தியின் இதயமானது ஒரு குழாய் வடிவத்தில் அமைந்துள்ளது. சிலந்திகளின் இரத்தமானது நீல நிறத்திலே இருக்கும். சிலந்தியின் இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் காணப்படுவதில்லை. சிலந்திக்கு நஞ்சு பாய்ச்சும் கொடுக்குப் போன்ற வாய்ப் பகுதி உண்டு.

பிற பூச்சியினங்களைப் போன்று கால்களை வெகுவாக நீட்டி மடக்க உதவும் தசைகள் சிலந்திகளுக்குக் கிடையாது. சிலந்திகளுக்கு எலும்புகள் இல்லை. சிலந்திகள் உணர்வதற்கும், வாசனையை முகர்வதற்கும் காலில் உள்ள சிறுமுடிகள் உதவுகின்றன.

பெரும்பாலான சிலந்தி இனங்கள் அளவில் சிறியவை. ஆண் சிலந்திகள், பெண் சிலந்திகளைவிட அளவில் சிறியனவாக காணப்படுகின்றன. கொலம்பியா நாட்டில் காணப்படும் உலகிலேயே மிகச்சிறிய அளவிலான Patu digua என்ற சிலந்தியின் நீளம் 3.37 மில்லி மீட்டர் ஆகும். உலகிலேயே மிகப்பெரிய சிலந்தியும் உள்ளது. கோலியாத் எனப்படும் சிலந்தி உலகிலேயே மிகப்பெரிய சிலந்தி என அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படுகிறது. Tarantula குடும்பத்தைச் சேர்ந்த இது, பறவைகளை உண்ணும் அளவுக்கு பெரிய சிலந்தி ஆகும். வடக்கு தென் அமெரிக்காவின் மழைக் காடுகளிலும், அமேசான் மழைக்காடுகளிலும் காணப்படுகிறது. 175 கிராம் வரை எடையும், நேரான கால்களுடன் 30 செ.மீ நீளம் வரை நீட்டவும் முடியும். இதன் எடை 175 கிராம் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வகைச் சிலந்திகளின் உடலில் முடிகள் காணப்படுகின்றன. இச்சிலந்திகள் பகல் பொழுதுகளில் வளைக்குள்ளும் இருட்டான பகுதிகளிலும் ஒளிந்து கொள்ளும். இவற்றிற்கு வலையைப் பின்னத் தெரியாது. பொதுவாக சிலந்திகளின் தாடை பக்கவாட்டாகதான் அசையும். ஆனால் Tarantulas எனும் சிலந்திகளின் தாடைகள் நம்மைப்போல மேலும் கீழும் அசையும் தன்மை உடையனவாக உள்ளன.

சிலந்திகளுக்கு குடல் மிக மிகச் சிறியது. இதனால் பெரிய உணவுப்பொருளை உட்கொள்ள இயலாது. மேலும் சுவைக்கும் உணர்வு கிடையாது. சிலந்திகள் உண்ணும் கெட்டியானப் பொருளைத் தன் உடலில் உருவாகும் நொதிகளைக் கொண்டு நீர்மமாக மாற்றி விடுகின்றன. சிலந்திகளின் உணவுப் பட்டியலில் கொசுக்கள், தேனீக்கள், ஈக்கள், பட்டாம்பூச்சிகள், சிறிய அந்துப் பூச்சிகள், சிறு பூச்சியினங்கள், பிற சிலந்திகள், பறவைகள் மற்றும் பல்லி போன்றவைகள் உள்ளன. பொதுவாக ஒரு சிலந்தி தன் வாழ்நாளில் குறைந்தது 2000 பூச்சிகளை உண்ணுகின்றன. Micaria Sociabilis இனத்தை சேர்ந்த ஆண் சிலந்திகள் பெரிய பெண் சிலந்திகளை மட்டும் உணவாக எடுத்து கொள்ளும். Bolas சிலந்தி எப்பொழுதும் ஆண் பட்டாம்பூச்சியை மட்டுமே உணவாக உட்கொள்ளும்.

Mesothelae சிலந்தி வகைத் தவிர மற்ற எல்லா வகை சிலந்திகளுக்கும் நரம்பு மண்டலம் உள்ளது. Tolamets என்னும் சிலந்தி தண்ணீரில் நடக்கும். நீருக்கு அடியிலும் சுவாசிக்கும் தன்மை உடையது. தன்னைத் தானே கோமா நிலைக்கு எடுத்துச் சென்று நீருக்கு அடியில் சில மணி நேரம் இருக்கும். சிலந்திகள் பொதுவாக நகர்ந்து செல்லும் உயிரியாக இருந்தாலும், சில வகை சிலந்திகள் குதித்தும், தாவியும் செல்லும். Bagheera Kiplingi என்ற வகை சிலந்தி பாயும் சிலந்தியாகும். இவ்வகை சிலந்தி தாவர உண்ணியாக உள்ளது. Peacock சிலந்தியினம் தாவும் சிலந்தியாகும். ஆண் சிலந்திகள் நீலம், சிவப்பு, பச்சை போன்ற நிறங்களில் இருக்கும். பெண் சிலந்திகள் வெளிரிய நிறத்தில் காணப்படும். மயில் சிலந்தி மிகவும் அழகாக நடனமாடும். Wolf சிலந்திகள் வலையைப் பின்னுவதில்லை. இவை பூமியில் குழிகளைத் தோண்டி அதற்குள் வசிக்கின்றன.

சிலந்திகளால் மனிதர்களுக்கு அச்சுறுத்தல் இல்லையென்றாலும் அமெரிக்க நாடுகளில் வாழும் Black Widow எனும் ஒரு வகை சிலந்தி கடித்தால் மரணம் ஏற்படும். Nursery Web சிலந்திகள் தங்கள் குட்டிகளை பாதுகாப்பதற்காக வலைகளைப் பின்னுகின்றன. இவை தன்னுடைய வலையில் முட்டைகளை இட்டு அவை பொரியும் வரை பாதுகாக்கின்றன. இவ்வகைச் சிலந்திகள் நீரின் மேல் ஓடும் அதிசய ஆற்றலைப்

பெற்றுள்ளன. தண்ணீரில் காணப்படும் மிகச்சிறிய மீன்களைப் பிடித்து இவை சாப்பிடுகின்றன. சிலந்தி இனத்தில் Crab சிலந்தி எனும் ஒரு வகை சிலந்தி உள்ளது. இவ்வகைச் சிலந்தியானது நண்டைப் போல் பக்கவாட்டில் நகரும் தன்மை கொண்டதாக உள்ளது. இவ்வகைச் சிலந்திகள் பூக்களின் மீது அமர்ந்து கொண்டு அந்த பூவின் நிறத்திற்கு தன் உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளும். பூக்களை நாடி வரும் பூச்சிகளை இச்சிலந்திகள் பிடித்து சாப்பிடுகின்றன.

சிலந்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது சிலந்தியின் வலை தான். இதனை, நூலாம்படை அல்லது சிலந்தி வலை என்று அழைப்பர். சிலந்தியின் வலையானது வட்டம், புனல், அறுங்கோணம் எனப் பல்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளது.

சிலந்திகளின் வயிற்றுப்பகுதியில் ஆம்புலேட், அக்னிபர்ம், டுபுலட், அக்ரிகேட், பிரிபர்ம், பிளகிலிபர்ம் என்ற ஆறு நூல் சுரப்பிகள் அமைந்துள்ளன. இதிலிருந்து சுரக்கும் ஒரு வித திரவமானது நுண்ணிய துளைகளின் வழியாக வெளியேறுகிறது. இந்த திரவமானது காற்று பட்ட உடன் கடினமாகும் தன்மை உடையது. இச்சுரப்பிகளின் மூலம் இவை ஒருவித நூலை உற்பத்தி செய்து வலைகளைப் பின்னுகின்றன.

அளவில் சிறியதாக இருந்தாலும் காடுகளில் பல மீட்டர் நீளம் கொண்ட வலையை பின்னும் தன்மை சிலந்திகளுக்கு உண்டு. சிலந்தி வலை காற்று, மழை மற்றும் பிற விலங்குகளால் சேதமடைந்தால் உடனே பழுதை சரிசெய்துவிடும். வலையினை வட்ட வடிவமாகத் தொடங்கி, பின் உள்ளமைப்பு, அதன்பின் குறுக்கு இழைகளைப் பின்னி முடிக்கின்றன. சிலந்தி வலையில் அதன் ஓரப்பகுதி மிக உறுதியாக இருக்கும். சிலந்திகள் தங்கள் வலைகளில் நகர்ந்து செல்ல நடுவில் உள்ள நகத்தையே பயன்படுத்துகின்றன.

சிலந்தியானது தனது வலையில் விழுந்த இரையினைப் பிடிக்க, ஒரு எளிய வழியினைக் கையாளுகின்றன. அதாவது இரையை வலையின் மேல் பக்கமிருந்து கீழ்ப் பக்கமாக வழுக்கி வரச் செய்து உண்ணுகின்றன. சிலந்தி வலைத் தோராயமாக 0.15 மைக்ரான்கள் ஆகும். சிலந்தி தன் வலையில் தனக்கானப் பாதையில் (நூல் பாதை) மட்டுமே செல்வதால் சிலந்தியின் கால்கள் ஒட்டிக் கொள்வதில்லை. Darwin's சிலந்தி என்ற புதிய வகை சிலந்தியால் பின்னப்பட்ட வலையே உலகில் பெரிய வலையாகும். இவ்வலையானது 82 அடி அகலத்தில் காணப்படுகிறது. இந்தியாவில் மிகப்பெரியச் சிலந்தி Trapdoor ஆகும். இவை 1.5 செ.மீ. வரை வளரும். இதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகளாகும்.

சில சிலந்தி இனங்கள் ஒரு வருடத்திற்கும் குறைவான ஆயுட்காலம் கொண்டவை, மற்றவை இருபது ஆண்டுகள் வரை வாழலாம். பெண் சிலந்திகளைவிட ஆண் சிலந்திகள் குறைவான வாழ்நாளே வாழக்கூடியதாகும்.

பூச்சிகளை உண்ணும் ஆயிரக்கணக்கான விலங்குகளுக்கு சிலந்திகள் உணவாகின்றன. தாவர உணவு உண்ணி பூச்சிகளை சிலந்திகள் அதிக அளவில் கொல்கின்றன; இதன்மூலம் தாவரங்களில் பூச்சிகள் ஏற்படுத்தும் சேதத்திலிருந்து சிலந்திகள் பாதுகாக்கின்றன. பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதிலும், மற்ற உயிரினங்களுக்கு இரையாவதிலும் காட்டுயிர்களின் உணவுச்சங்கிலியில் சிலந்திகளுக்கு முக்கிய இடம் உண்டு. சிலந்தியை தான் கம்போடியா மக்கள் உணவாக உட்கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வனங்கள் செயற்கையாக அழிக்கப்படுவதாலும், காட்டுத் தீ மற்றும் பல காரணங்களால் சிலந்தி அழிந்து வருகின்றன.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

தன் இரையைப் பிடிக்க வலையின் நடுவில் செல்வதற்கு **சிலந்திக்கு** சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# நீ எழுந்து நட

இயேசுவின் சிலுவை மரணத்துக்குப் பின் சீடர்கள் ரொம்பவே சோர்ந்து போனார்கள். இயேசுவோடு கூட நடந்தபோது நெஞ்சு நிமிர்த்தி நடந்தவர்கள் எல்லாரும் இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின் தலைக்கு முக்காடிட்டுக் கொண்டு அறைகளில் பதுங்கினார்கள்.

மூன்றாவது நாள். இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார். முதலில் மகதலேனா மரியாளுக்குக் காட்சியளித்த இயேசு, அதன்பின் எம்மாவூர் சென்ற இரண்டு சீடர்களுக்குக் காட்சியளித்தார்.

ஆனாலும் பேதுருவும் அவருடன் இருந்த சில சீடர்களும் தங்கள் பழைய வேலையான மீன்பிடிக்கும் தொழிலுக்கே திரும்பினார்கள். ஆனால் இயேசு மீண்டும் அவர்களுக்கு நேரடியாகக் காட்சியளித்து நம்பிக்கையூட்டினார். பின்னர் பரிசுத்த ஆவியானவரை உலகிற்கு அனுப்பி சீடர்களை நிரப்பினார். அதன்பின்பு தான் சீடர்கள் இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிவிக்கத் துவங்கினார்கள்.



ஒருநாள் ஜெபம் செய்வதற்காக பேதுருவும், யோவானும் ஆலயத்துக்குச் சென்றார்கள். ஜெபம் செய்வது என்பது அவர்களுடைய வழக்கமாய் இருந்தது.

ஆலயத்தில் அலங்கார வாசல் என்னுமிடத்தில் ஒருவன் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அலங்கார வாசல் என்பது எருசலேம் தேவாலயத்தின் முதல் வாசல். அவன் பிறவியிலேயே கால்கள் வலுவில்லாத ஒரு முடவன் (சப்பாணி). பிழைப்புக்கு வேறு வழி ஏதும் இல்லாததால் ஆலய வாசலில் அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

தினமும் காலையில் சிலர் அவனைத் தூக்கி வந்து ஆலய வாசலில் அமரச் செய்வார்கள். மாலையில் அவனைத் தூக்கிக் கொண்டு செல்வார்கள்.

பேதுருவும், யோவானும் ஆலயத்தில் ஜெபிப்பதற்காக உள்ளே வந்தபோது வாசலில் அமர்ந்திருந்தான் அவன்.

‘ஐயா... காலில்லாத ஏழைக்கு உதவுங்களேன்...’ அவன் பேதுருவைப் பார்த்து தர்மம் கேட்டான். பேதுருவும், யோவானும் நின்றார்கள்.

பேதுரு அவனை உற்றுப் பார்த்துக் கொண்டே சொன்னார் ‘என்னைப் பார்’. அவன் ஆவலுடன் அவரைப் பார்த்தான்.

‘உனக்குத் தர எங்களிடம் வெள்ளியும், பொன்னும் இல்லை’ பேதுரு சொல்ல, அவனுடைய முகம் வாடிப்போயிற்று.

பேதுரு அவனை மீண்டும் உற்றுப் பார்த்தார்.

‘உனக்குத் தர பொன்னோ, வெள்ளியோ என்னிடம் இல்லை. ஆனால் என்னிடம் இருப்பதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட’ என்று கூறி அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார்.

வலுவில்லாமல் கிடந்த அவனுடைய கால்கள் சட்டென்று வலுவடைந்தன. அவனுடைய கணுக்கால்கள் நேராகின. அவன் நின்றான். வாழ்க்கையில் முதன் முறையாக அவன் இரண்டு கால்களினால் நிற்கிறான். அவன் ஆனந்தக் கூச்சலிட்டான். அங்கே பெரும் கூட்டம் கூடிவிட்டது.

‘ஏய்... இவன் அங்கே பிச்சை எடுத்துக் கொண்டிருந்த முடவன் அல்லவா? இப்போது எப்படி நிற்கிறான்?’

‘அவன் தானா இது? அல்லது வேறு யாராவதா?’

‘அவனுடைய கையைப் பிடித்து அந்த மனிதர் எழுப்பி விடுவதை நான் பார்த்தேன்’ மக்களிடையே செய்தி காட்டுத் தீ போல பரவியது.

பேதுருவையும், யோவானையும் கூட்டத்தினர் மொய்த்துக் கொண்டார்கள். இயேசுவைப் பிரிந்தபிறகும் சீடர்களால் அதிசயச் செயல்கள் செய்ய முடிகிறதே என்று மக்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

‘ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள். அவனைக் குணமாக்கியது நாங்களல்ல, இயேசு கிறிஸ்துவின் பெயர் தான் அவனைக் குணமாக்கியது. அவர் தான் உண்மையான தேவ குமாரன். அவரை நீங்கள் பிலாத்துவிடம் ஒப்படைத்தீர்கள். பிலாத்து விடுவிக்க விரும்பிய போது கூட நீங்கள் இயேசுவுக்கு எதிரானீர்கள். அவர் உங்களுக்காக மரணத்தை ஏற்றுக் கொண்டார்.’ பேதுரு பேசப் பேச கூட்டத்தினர் மௌனமானார்கள்.

‘நீங்கள் அதை அறியாமையினால் தான் செய்தீர்கள். இது நடக்கவேண்டும் என்பது தேவனின் விருப்பம் தான். நீங்கள் கொலை செய்த இயேசு உயிர்த்துவிட்டார். அதற்கு நாங்கள் சாட்சிகள். அவரைக் கண்டவர்கள் அனைவரும் சாட்சிகள். இனிமேலாவது மனம் மாறி இயேசுவின் வழியில் நடவுங்கள்’ பேதுரு உரத்த குரலில் மக்களை அழைத்தார்.

மக்கள் கூட்டத்தினரிடையே மாபெரும் விழிப்புணர்வு நிகழ்ந்தது. சுமார் ஐயாயிரம் பேர் அப்போதே இயேசுவின் வழியில் செல்லப்போவதாக வாக்களித்தனர். கிறிஸ்தவத்தின் ஆரம்பம் அங்கே ஆழமாக நடப்பட்டது. இயேசு வாழ்ந்த போதும் அந்த முடவன் அங்கே தான் இருந்திருப்பான். அப்போது அவனை ஏன் இயேசு குணமாக்கவில்லை என எழுகின்ற கேள்விகளுக்கு விடை இப்படி வெளிப்பட்டது. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது நற்செய்தி அறிவிக்கும் துணிச்சலும், அதிசயங்களும் பிறக்கும் என்பதை இந்த நிகழ்வு விளக்குகிறது.

## “குணமாக்கப்பட்ட முடவன்” தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: அப். 3ஆம் அதிகாரம்)


நட
பொன்
பேதுரு
வெள்ளி
சப்பாணி
யோவான்
தேவாலயம்
ஜெபவேளை




நசரேயன்
வலதுகை
குதித்தெழுந்து
நாமத்தினாலே
ஒன்பதாம் மணி
இயேசுகிறிஸ்து
அலங்கார வாசல்
சாலொமோன் மண்டபம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ | சா | லொ | மோ | ன் | ம | ண் | ட | ப | ம் |
| ன் | வெ | ள் | ளி | ந | ச | ரே | ய | ன் | அ |
| ப | நா | கு | தி | த் | தெ | ழு | ந் | து | ல |
| தா | ம | வா | ர | ண் | வ | ல | து | கை | ங் |
| ம் | த் | ந | ட | சா | யோ | வா | ன் | ஜெ | கா |
| ம | தி | வ | பே | து | ரு | ம | ள் | ப | ர |
| ணி | னா | ந் | தா | ச | ப் | பா | ணி | வே | வா |
| பொ | லே | கா | தே | வா | ல | ய | ம் | ளை | ச |
| ன் | கை | இ | யே | சு | கி | றி | ஸ் | து | ல் |

# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)




நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.
(யாக்கோபு 5:16)




அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை. உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது. (எரேமியா 5:24,25)




சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார். (ஏசாயா 61:3)




நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். (மாற்கு 11:24)

# பிரெயின் ராட்



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தற்போது மொபைல் போன் பயன்பாடு அதிகரித்துவிட்டது. குறிப்பாக இளைஞர்கள், குழந்தைகள் மொபைல் போனுக்கு அடிமையாவதால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து அதிகம் பேசப்படுகிறது.

சமூக வலைத்தளங்கள் மட்டுமின்றி இப்போது வீடியோ கேம்களில் குழந்தைகள், இளைஞர்கள் ஈடுபடுவதால் ஏற்படும் பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் குழந்தைகளின் ஒட்டுமொத்த சரியான வளர்ச்சிக்கு அவர்களை ஆன்லைன் உலகத்தில் இருந்து தள்ளிவைக்க வேண்டும் என்று பெரும்பாலான நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

குழந்தைகள் ஆன்லைன் விளையாட்டுகளில் அதிகம் ஈடுபடுவதால் சுதந்திரமாக தனிமையில் இருக்கின்றனர். டிவி, மொபைல் போனிலே அதிக நேரம் கழிக்கும் குழந்தைகளின் கல்வித்தரம் குறைகிறது என்றும் பெரும்பாலான ஆய்வுகளும் கூறுகின்றன. மேலும் அவர்களின் தனிப்பட்ட குணநலன்களும் மாறுபடுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு ஆன்லைன் விளையாட்டு அல்லது மொபைல் போன் அதிகம் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு / பதின் வயதினருக்கு மூளைச் செயல்திறன் குறையும் 'பிரெயின் ராட்' என்ற பிரச்சனை ஏற்படுகிறது.

அதிகமாக மொபைல்/கணினி பயன்படுத்துவது, ஆன்லைன் விளையாட்டுகளில் ஈடுபடும்போது நிஜ உலகத்தில் தொடர்பு இல்லாததால் ஏற்படும் அறிவாற்றல் குறைவே இந்த பிரெயின் ராட். இது நரம்பியல் குறைபாடு அல்ல, ஒருவகையான போதைக்கு அடிமையாவது. தொடர்ந்து சிகிச்சை அளிக்கும்பட்சத்தில் அதிலிருந்து மீளலாம். எனினும் இந்த பாதிப்பில் இருந்து மீள்வது சாதாரணமானது அல்ல என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இளம்வயதினர் பலரும், இந்த பிரச்சனை இருப்பது தெரியாமலும் எதிர்கால தாக்கம் குறித்து அறியாமலும் மனதளவில் போராடி வருவதாகவும் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

‘பிரெயின் ராட்’ எனும் மூளை செயல்திறன் குறைவு என்பது சிந்தனையற்ற மனத்தேக்க நிலை. அறிவாற்றல், கவனம் செலுத்தும் திறன், படைப்பாற்றல், கற்றல் திறன் உள்ளிட்டவை குறையும். மூளையில் சரியான தூண்டுதல் அல்லது சரியான மூளைப் பயன்பாடு இல்லாததால் மூளையில் ஏற்படும் செயல்திறன் குறைவு.

12 வயதிற்குட்பட்ட குழந்தைகள், குறிப்பாக சமூக ஊடகங்களில் தரம்குறைந்த, உண்மையல்லாத வீடியோக்களை இரண்டு மணி நேரத்திற்கு மேல் பார்ப்பது அவர்களின் அறிவாற்றல், படைப்பாற்றலைத் தடுக்கிறது என்கிறார்.

## அறிகுறிகள்

மூளைச் செயல்திறன் குறைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நினைவுத் திறன் குறைதல், அமைதியின்மை, கவனம் செலுத்துவதில் சிரமம், அதிக உணர்ச்சியை வெளிப்படுத்துதல், கல்வி செயல்திறன் குறைதல், அறிவாற்றல், படைப்பாற்றல் குறைதல், சிந்தனையில் தெளிவின்மை, சமூக தொடர்புகளை விரும்பாமை உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படும். இது மன நல பாதிப்புகளுக்கும் வழிவகுக்கும்.

## காரணம்

கணினி, மொபைல் போனில் அதிக நேரம் இருப்பதுதான் மூளைச் செயல்திறன் குறைவு ஏற்படுவதற்கு முக்கியக் காரணம்.

நகர வாழ்க்கை முறை, தனிக் குடும்பங்களாக வசித்தல், கல்விக்கு அதிக முக்கியத்துவம், சமூகத் தொடர்புகள் இல்லாத அடுக்குமாடிக் குடியிருப்பு வாழ்க்கை, வேலைக்குச் செல்லும் பெற்றோரால் குழந்தைகள் தனித்திருத்தல் உள்ளிட்ட சூழ்நிலைக் காரணங்களால் குழந்தைகள் மொபைல் போன் அல்லது ஆன்லைன் விளையாட்டுகளில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

வெறுமனே மொபைல் போனை ஸ்க்ரோல் செய்வதாலோ ஆன்லைன் விளையாட்டுகளில் தொடர்ந்து ஈடுபடுவதாலோ மூளையில் டோபமைன் சுரப்பு குறைந்து எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் சிந்தனைத் திறன் குறைகிறது. மேலும் ஸ்க்ரோல் செய்வதால் தற்காலிக மகிழ்ச்சி கிடைக்குமே தவிர, நமது மூளைக்கு அவைகள் தேவையில்லாதவைதான். இது மனநிலையையும் அதிகம் பாதிக்கிறது.

## என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளை அதிக நேரம் கணினி / மொபைல் திரை பார்ப்பதைக் குறைக்க வேண்டும்.

டிஜிட்டல் உலகத்தில் இருந்து அவர்களை தள்ளிவைத்திருக்க வேண்டும்.


குழந்தைகளுடன் பெற்றோர் நேரம் செலவழிக்க வேண்டும், மற்ற குழந்தைகளுடன் விளையாடுவது உள்ளிட்ட சமூகத் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.

‘பிரெயின் ராட்’ என்ற இந்த வார்த்தை 2023-2024ஆம் ஆண்டுகளுக்கு இடையில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், 2024ஆம் ஆண்டின் வார்த்தை ‘பிரெயின் ராட்’ என அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் குழந்தைகள் / பதின்வயதினர் மட்டுமின்றி இளைஞர்கள், முதியவர்கள் என அனைவருக்குமே இந்த பாதிப்பு ஏற்படுவதாகவும் இதிலிருந்து தற்காத்துக்கொள்ள கணினி, மொபைல் பயன்படுத்தும் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# சிலந்தி!

சிலந்தியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# பண ஆசை

ஒருமுறை ஒரு பணக்கார இளைஞன் இயேசுவிடம் வந்தான். பரலோக இராஜ்ஜியத்திற்குப் போகணும்னா நான் என்ன செய்யணும் என்று கேட்டான். இயேசு அவனிடம் கட்டளைகளைக் கடைபிடி என்றார். அதையெல்லாம் நான் கடைபிடிக்கிறேன் என பதில் சொன்னான் அந்த இளைஞன். இயேசு அவனைப் பார்த்துச் சொன்னார், ‘‘உனக்கு ஒரே ஒரு குறை தான் இருக்கு. போய் உனக்குள்ள சொத்தையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு’’! அவ்வளவு தான். அந்த செல்வன் சோகத்தினால் திரும்பிப் போனான். அவனால் செல்வத்தை விடமுடியவில்லை, எனவே இயேசுவை விட்டு விட்டுப் போனான்.

இயேசுவின் போதனைகளில் முக்கியமானது பண ஆசை. பணம் வைத்திருப்பதை இயேசு எதிர்க்கவில்லை. பண ஆசை வைத்திருப்பதை அவர் எதிர்த்தார். செல்வத்தின் மீதான ஆசை மிகப்பெரிய பாவம் என பரிசுத்த வேதாகமம் வலியுறுத்திக் கூறுகிறது.

தேவனுக்கு எதிர்ப்பதம் என்ன என்று கேட்டால் சாத்தான் என்று சொல்வோம். ஆனால் இயேசு அப்படிச் சொல்லவில்லை. தேவனுக்கு எதிர்ச்சொல் செல்வம் என்கிறார்.

‘‘எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் தேவனுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது’’ என்கிறார் இயேசு.

அதாவது செல்வத்தை அன்பு செய்கிறீர்கள் என்றால் தேவனை வெறுக்கிறீர்கள் என பொருள். செல்வத்தைச் சார்கிறீர்கள் எனில் இறைவனை புறக்கணிக்கிறீர்கள் என்று பொருள். எனவே யாருக்கு நீங்கள் பணிவிடை செய்யப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் ஆன்மீக வாழ்க்கை அளவிடப்படும்.

மனிதர்கள் அன்பு செய்யப்பட வேண்டியவர்கள். பணம் பயன்படுத்தப்பட வேண்டியது.

ஆனால் இன்றைய உலகம் பணத்தை அன்பு செய்கிறது, மனிதர்களைப் பயன்படுத்துகிறது.

எனவே தான் உலகெங்கும் சுயநலச் சுரண்டல்கள் நிரம்பி வழிகின்றன. செல்வம் நெருப்பைப் போன்றது. அதை அடக்கி, சரியான வகையில் பயன்படுத்தினால் அடுப்பில் எரியும் நெருப்பைப் போல பயனளிக்கும். இல்லையேல் நம்மையே அழிக்கும்.

உங்களுக்குப் பண ஆசை இருக்கிறதா? இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது மிக எளிது. திடீரென உங்களுடைய ஒரு நிலத்தை இன்னொருவர் வந்து அபகரித்து விட்டார் என வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய மனநிலை எப்படி இருக்கும். பதட்டமடைந்து, கலக்கமடைந்து, உடைந்து போகிறீர்களா? இல்லை பதட்டப்படாமல் நிலமையை எதிர்கொள்கிறீர்களா?



திடீரென உங்களுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வருகிறது என வைத்துக் கொள்ளுங்கள். சட்டென உற்சாகமும், பரவசமும் அடைகிறீர்களா? சாதாரணமாய் அந்த சூழலை எதிர்கொள்கிறீர்களா? இந்த இரண்டு சூழல்களிலும் நீங்கள் சாதாரண மனநிலையில் இருந்தால் உங்களுக்கு செல்வத்தின் மீது நாட்டம் இல்லை என்பது தெளிவு!

செல்வத்தின் மீது ஆசை இல்லாதவர்கள் பிறருக்கு கொடுப்பதில் தயங்க மாட்டார்கள். எல்லாமே தேவன் தந்தது எனும் மனநிலையில் இருப்பார்கள். தேவன் தந்த செல்வத்தை இல்லாதவர்களுக்குக் கொடுப்போம் என நினைப்பார்கள்.

செல்வத்தின் மீது ஆசை இல்லாதவர்கள் தங்களுடைய நேரத்தையெல்லாம் செல்வத்தைத் தேடுவதிலேயே செலவிட மாட்டார்கள். தேவனைத் தேடுவதிலும், தேவனுக்குப் பிடித்தமான செயல்களைச் செய்வதிலும் செலவிடுவார்கள்.

செல்வத்தின் மீது ஆசை இல்லாதவர்கள் சுயநலம் இல்லாதவர்களாய் இருப்பார்கள். தன்னுடைய களஞ்சியத்தைப் பெரிதாக்குவதில் காலத்தைச் செலவிட மாட்டார்கள்.

செல்வத்தின் மீது ஆசை இல்லாதவர்கள் சிக்கனமாய் வாழப் பழகுவார்கள். எது நமக்கு தேவனால் தரப்பட்டதோ அந்த எல்லையில் மகிழ்ச்சியாய் வாழ்வோம் என நினைப்பார்கள். பிறரோடு ஒப்பிட்டு கவலையடைய மாட்டார்கள்.

இவையெல்லாம் செல்வத்தின் மீதான ஆசை இல்லை என்பதன் சில வெளிப்பாடுகள்.

செல்வத்தின் மீதான ஆசையே மற்ற எல்லா ஆசைகளுக்கும் தாய் என்கிறது பரிசுத்த வேதாகமம். அது தான் சக மனிதன் மீதான கரிசனையை குறைக்கிறது. சக மனிதனை நேசிக்காதவன் தேவனை நேசிக்க முடியாது என்கிறது பரிசுத்த வேதாகமம். தேவனை நேசிக்க முடியாதவன் விண்ணகம் செல்லவும் முடியாது. அதைத் தான் இயேசு சொன்னார்.

''செல்வர் பரலோக இராஜ்ஜியத்திற்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' என்று! ஒருவன் செல்வந்தனாய் இருக்கிறான் எனில் அவன் பிறருக்குப் பகிர்ந்தளிக்கவில்லை என்பதே பொருள். அப்படியானால் அவன் தன்னைப் போல பிறரை நேசிக்கவில்லை என்பதே பொருள்.

செல்வத்தை விண்ணகத்தில் சேமியுங்கள் என்றார் தேவன். கேட்பதற்கு விசித்திரமாய் இருக்கும். ஆனால் எது நம்மோடு பரலோகம் வரும்? நாம் சேர்த்த செல்வங்கள் அல்ல, நாம் செய்த நல்ல செயல்கள். நாம் முழுமனதாய் செய்த அன்புப் பணிகள். நாம் தேவனுக்காய் செய்த ஆன்மீகப் பணிகள். இவையே பரலோகத்தில் சேமிக்கப்படும் செல்வங்கள்.

இதைத் தான் இயேசு சொன்னார், 'உலகத்தில் கிடைக்கும் அழிந்து போகும் செல்வத்தைக் கொண்டு பரலோகத்துக்கான செல்வத்தைச் சேமியுங்கள்'' என்று!

செல்வம் தவறானது அல்ல. ஆனால் அது ஆபத்தானது. கத்தி தவறானது அல்ல, கவனமாய்க் கையாள வேண்டியது.

இயேசு அதிகம் போதித்த விஷயம் எது தெரியுமா? பரலோகம் அல்ல! நரகம் அல்ல! நம்பிக்கை அல்ல! ஜெபம் அல்ல! ஏன் அன்பு கூட அல்ல! செல்வம்!!! செல்வத்தைக் குறித்து தான் இயேசு அதிகம் பேசினார். அவருடைய போதனைகள், உவமைகள், புதுமைகள் போன்றவையெல்லாம் செல்வம் சார்ந்தவையாக இருந்தன. காரணம் செல்வம் மனிதனை எளிதில் தேவனை விட்டு விலக்கி விடும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

செல்வத்தின் மீதான நாட்டம், தேவனை விட்டு நம்மை விலக்கும் என்பதை உணர்வோம். மனித நேயத்தை மனதில் கொண்டு தேவனை நெருங்குவோம்.

# வேதமே வெளிச்சம்


மத்தேயு 21:22
God bless you
நீங்கள்
விசுவாசமுள்ளவர்களாய்
ஜெபத்திலே
எவைகளைக்
கேட்பீர்களோ
அவைகளையெல்லாம்
பெறுவீர்கள்.


சங்கீதம் 34:17 - God bless you
நீதிமான்கள் கூப்பிடும்போது
கர்த்தர் கேட்டு, அவர்களை
அவர்களுடைய எல்லா
உபத்திரவங்களுக்கும்
நீங்கலாக்கிவிடுகிறார்.


கர்த்தர்
செய்ய நினைத்தது
தடைபடாது
யோபு:42:2


கர்த்தாவே,
உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குப் போதித்தருளும்.
நீரே என் தேவன்;
உம்முடைய நல்ல ஆவி என்னைச்
செம்மையான வழியிலே
நடத்துவாராக.
சங்கீதம் 143:10
God bless you

# கனிவு



ஞாயிற்றுக்கிழமை திருச்சபையை விட்டு வெளியே வரும்போதெல்லாம் அந்த தாத்தாவை சந்திப்பேன். கனிந்த இதயங்கள் தரும் காசுக்காக கையேந்தி நிற்பார் அவர். கடந்த ஓரிரு வாரங்களாக அவரைக் காணவில்லை. மீண்டும் சந்தித்தபோது கேட்டேன்.

''என்னாச்சு... ரெண்டு மூணு வாரமா ஆளைக் காணோமே... எங்க போயிருந்தீங்க?'' என கேட்டேன்.

''என் பேரப்புள்ளையை வாரிக்குடுத்துட்டு வந்திருக்கேன்பா..'' என்றவர் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். அதிர்ச்சியாக இருந்தது. அமைதியாக கையேந்தி நின்ற அவருக்குள் இப்படி அணை உடையக் காத்திருக்கும் ஒரு பெருஞ்சோகம் இருக்கும் என்பதை நான் கணித்திருக்கவில்லை.

சற்று நேரம் நிகழ்ந்ததையெல்லாம் சொன்னார். எதிர்பாராத அந்த விபத்து எப்படி அந்த சின்னக் குடிசையை சின்னாபின்னமாக்கியது எனும் கதை மனதுக்குள் பாரமாய் வந்தமர்ந்தது.

நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற ஏழை எளிய மக்களின் வாழ்க்கை பரிதாபத்துக்குரியது. அவர்களுக்கு நாம் பல நேரங்களில் பணம் கொடுக்கிறோம். சில உதவிகளைச் செய்கிறோம். கரிசனை காட்டுகிறோம். ஆனால் எந்த அளவுக்கு அவர்களை கனிவுடன் நடத்துகிறோம். எந்த அளவுக்கு அவர்களுடைய வலிகளுக்குச் செவி கொடுக்கிறோம்? இது மிகப்பெரிய கேள்விக்குறி தான்.

இறுக்கமான முகத்தோடு கொடுக்கின்ற நூறு ரூபாயை விட, புன்னகையோடு கொடுக்கும் பத்து ரூபாய் பெரியது. அது பரலோகத்தில் எழுதப்படும். வாங்கும் நபருடைய இதயத்திலும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். பிறருக்கு உதவுதல் என்பது நமது பெருந்தன்மையல்ல, நமக்கு தேவன் தரும் வாய்ப்பு. பிறருக்கு கொடுப்பது என்பது நமது பெருமையல்ல, தேவனுக்கு நாம் மகிமை செலுத்தக் கிடைக்கும் வாய்ப்பு.

நம் முன்னால் ஒரு போதகர் வந்தால் நமது புன்னகை சினிமாஸ்கோப் அளவுக்கு விரிகிறது. அழுக்கடைந்த ஒரு ஏழையைக் கண்டால் அது வெற்றிலைக் கிழவியின் சுருக்குப் பைபோல சுருங்கி விடுகிறது. இருவரிடமும் இருப்பது தேவனின் பிம்பம் எனும் உண்மை நமக்கு உறைப்பதில்லை. ஏழையை உதாசீனப்படுத்தும் கணத்தில் நாம் தேவனை உதாசீனப்படுத்துகிறோம்.

''ஏழையைப் பரியாசம்பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; ஆபத்தைக்குறித்துக் களிக்கிறவன் தண்டனைக்குத் தப்பான்'' என்கிறது நீதிமொழிகள் 17:5.

இறுதித் தீர்வை நாளில் தேவன் நம்மிடம் கேட்கும் கேள்வியின் சாரம்சம் ஒன்றே ஒன்று தான், ''ஏழையை நிராகரித்ததன் மூலம் நீ என்னை நிராகரித்துவிட்டாய். எனவே உனக்கு பரலோகத்தில் அனுமதி இல்லை''

ஏழைகளை நேசிப்போம், சக மனிதனாக, உறவாக. அதுவே தேவனை பிரியப்படுத்தும்.

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024



ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
அதிகாலையில்
பரிசுத்த ஆவியானவரோடு
◆ அதிகாலை ஜெபம்
◆ அதிகாலை ஆராதனை
◆ அதிகாலை ஸ்தோத்திரபலி
நேரடியாக கலந்துகொண்டு பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
Pastor OSBORNE JEBADURAI
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
எண்.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777, +919884908777, +919884916777
தினமும் காலை 5:00 மணிமுதல் 6:00 மணிவரை




நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்
யோசுவா 24:15
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
குடும்ப ஆசீர்வாத ஜெப நேரம்
தினமும் காலை 10 மணி முதல் 12 மணி வரை
உங்களுடைய குடும்பத்திற்காகவும், உங்களுடைய தேவைகளுக்காகவும், உங்களுடைய பிரச்சனை மற்றும் போராட்டங்களுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.
PASTOR OSBORNE JEBADURAI
இந்த ஜெபத்தில் நீங்கள் நேரடியாக வந்து கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுகொள்ளுங்கள்
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷின் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.




If undelivered please return to:


**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India

for 24X7 Prayer: 91-9444322200, 9444322211

Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com